## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்

**அசல் வழக்கு எண்.406/2015**
(CNR.No. TNTS1A-000196-2015)

சாந்தம்மாள் ....வாதி

அந்தோணி
(வாதிக்கு பவர் ஏஜெண்டு நிலமையில்)

/எதிர்/

தங்கமணி மற்றும் 18 நபர்கள் .... பிரதிவாதிகள்

| | | |
|---|---|---|
| முத்திரைக்கட்டணச் சட்டப்பிரிவு | – | 25(b), 27(c) |
| வழக்கின் தன்மை | – | விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை, வலியுறுத்துக் கட்டளை |
| வழக்கின் மதிப்பு | – | ரூ.3,000/– அதில் பாதி ரூ.1500/– + ரூ.1,000/– மொத்தம் ரூ.4,000/– |
| நீதிமன்ற முத்திரைக்கட்டணம் | – | ரூ.113.00/– + ரூ.75.50/– மொத்தம் ரூ.188.50/– |

(கூடுதலாக ரூ.0.50/–ம் ஆக மொத்தம் ரூ.189.00/– நீதிமன்ற முத்திரை கட்டணம் வாதியால் செலுத்தப்பட்டுள்ளது).

//உத்தரவுப்படி//

தலைமை எழுத்தர்

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
சங்கரன்கோவில்

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண்.406/2015**

(CNR.No. TNTS1A-000196-2015)

சங்கரன்கோவில் தாலுகா, குருவிகுளம் அஞ்சல், தெற்கு குருவிகுளம் கிராம மஜரா, கே.புதூர் கிராமம், கிழக்குத் தெருவில் கதவு எண்.1/178 ல் இருக்கும் லேட்.பாண்டி அவர்கள் மனைவி, வயது 58 உள்ள சாந்தம்மாள்

....வாதி

மேற்படி வாதிக்கு சங்கரன்கோவில் வட்டம், குருவிகுளம் அஞ்சல், தெற்கு குருவிகுளம் மஜரா, கே.புதூர் கிராமம், கிழக்குத் தெருவில் கதவு எண்.1/178 ஏ–ல் இருக்கும் லேட்.பாண்டி குமாரர், வயது 45 உள்ள அந்தோணி பவர் ஏஜெண்டு மூலம்.

(**இ.ம.எண்.12/2026 மனுவானது பகுதியாக அனுமதிக்கப்பட்டு 12.02.2026 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி, வாதி பொது அதிகார முகவர் மூலமாக வழக்கை மேல்நடத்த அனுமதிக்கப்பட்டு வழக்குரை திருத்தம் செய்யப்பட்டுள்ளது).

/எதிர்/

1. சங்கரன்கோவில் தாலுகா, குருவிகுளம் அஞ்சல், தெற்கு குருவிகுளம் கிராம மஜரா, கே.புதூர் கிராமம், கிழக்குத் தெருவில் இருக்கும் லேட்.சுப்பையா அவர்கள் குமாரர், வயது 50 உள்ள தங்கமணி
2. சங்கரன்கோவில் தாலுகா, குருவிகுளம் அஞ்சல், தெற்கு குருவிகுளம் கிராம மஜரா, கே.புதூர் கிராமம், கிழக்குத் தெருவில் இருக்கும் தங்கமணி அவர்கள் மனைவி, வயது 50 உள்ள கடற்கன்னி
3. சங்கரன்கோவில் தாலுகா, குருவிகுளம் அஞ்சல், தெற்கு குருவிகுளம் கிராம மஜரா, கே.புதூர் கிராமம், கிழக்குத் தெருவில் இருக்கும் சிவனாண்டி அவர்கள் குமாரர், வயது 60 உள்ள பரமசிவம் (இறந்தவர்)

4. சங்கரன்கோவில் தாலுகா, குருவிகுளம் அஞ்சல், தெற்கு குருவிகுளம் கிராம மஜரா, கே.புதூர் கிராமம், கிழக்குத் தெருவில் இருக்கும் மாடசாமி அவர்கள் குமாரர், வயது 55 உள்ள சின்னமாரியப்பன் (இறந்தவர்)
5. சங்கரன்கோவில் தாலுகா, குருவிகுளம் அஞ்சல், தெற்கு குருவிகுளம் கிராம மஜரா, கே.புதூர் கிராமம், கிழக்குத் தெருவில் இருக்கும் கருப்பன் அவர்கள் குமாரர், வயது 63 உள்ள சண்முகவேல்
6. சங்கரன்கோவில் தாலுகா, குருவிகுளம் அஞ்சல், தெற்கு குருவிகுளம் கிராம மஜரா, கே.புதூர் கிராமம், கிழக்குத் தெருவில் இருக்கும் லேட்.பாலு அவர்கள் குமாரர், வயது 48 உள்ள ஜெபசிங்
7. சங்கரன்கோவில் தாலுகா, குருவிகுளம் அஞ்சல், தெற்கு குருவிகுளம் கிராம மஜரா, கே.புதூர் கிராமம், கிழக்குத் தெருவில் இருக்கும் செல்லையா அவர்கள் குமாரர், வயது 50 உள்ள பால்ராஜ்
8. சங்கரன்கோவில் தாலுகா, குருவிகுளம் அஞ்சல், தெற்கு குருவிகுளம் கிராம மஜரா, கே.புதூர் கிராமம், கிழக்குத் தெருவில் இருக்கும் வேதமுத்து அவர்கள் குமாரர், வயது 49 உள்ள வேதமாணிக்கம்
9. சங்கரன்கோவில் தாலுகா, குருவிகுளம் அஞ்சல், தெற்கு குருவிகுளம் கிராம மஜரா, கே.புதூர் கிராமம், கிழக்குத் தெருவில் இருக்கும் லேட்.மோசை அவர்கள் குமாரர், வயது 45 உள்ள அப்பாத்துரை
10. சங்கரன்கோவில் வட்டம், குருவிகுளம் அஞ்சல், கே.புதூர் கிராமம், வாட்டர் டேங் காலனியில் இருக்கும் லேட்.பரமசிவம் மனைவி, வயது 56 உள்ள தாயம்மாள்
11. சங்கரன்கோவில் வட்டம், குருவிகுளம் அஞ்சல், கே.புதூர் கிராமம், வாட்டர் டேங் காலனியில் இருக்கும் லேட்.பரமசிவம் குமாரர், வயது 36 உள்ள நாகராஜ்
12. சங்கரன்கோவில் வட்டம், குருவிகுளம் அஞ்சல், கே.புதூர் கிராமம், வாட்டர் டேங் காலனியில் இருக்கும் லேட்.பரமசிவம் குமாரர், வயது 34 உள்ள நாகையா
13. சங்கரன்கோவில் வட்டம், குருவிகுளம் அஞ்சல், கே.புதூர் கிராமம், நடுத்தெருவில் இருக்கும் லேட்.பரமசிவம் குமாரர், வயது 32 உள்ள நாகப்பன்
14. சங்கரன்கோவில் வட்டம், குருவிகுளம் அஞ்சல், கே.புதூர் கிராமம், கிழக்குத்தெருவில் இருக்கும் லேட்.பரமசிவம் குமாரர், வயது 30 உள்ள நாகேந்திரன்

15. சங்கரன்கோவில் வட்டம், குருவிகுளம் அஞ்சல், கே.புதூர் கிராமம், வாட்டர் டேங் காலனியில் இருக்கும் லேட்.பரமசிவம் குமாரர், வயது 28 உள்ள நாகர்
16. சங்கரன்கோவில் வட்டம், குருவிகுளம் அஞ்சல், தெற்குகுருவிகுளம் கிராம மஜரா, கே.புதூர் கிராமம், கிழக்குத்தெருவில் இருக்கும் லேட்.சின்னமாரியப்பன் மனைவி, வயது 56 உள்ள அந்தோணியம்மாள்
17. சங்கரன்கோவில் வட்டம், குருவிகுளம் அஞ்சல், தெற்குகுருவிகுளம் கிராம மஜரா, கே.புதூர் கிராமம், கிழக்குத்தெருவில் இருக்கும் லேட்.சின்னமாரியப்பன் குமாரத்தி, வயது 36 உள்ள மகேஸ்வரி
18. சங்கரன்கோவில் வட்டம், குருவிகுளம் அஞ்சல், தெற்குகுருவிகுளம் கிராம மஜரா, கே.புதூர் கிராமம், கிழக்குத்தெருவில் இருக்கும் லேட்.சின்னமாரியப்பன் குமாரர், வயது 33 உள்ள ராஜேஸ்
19. சங்கரன்கோவில் வட்டம், குருவிகுளம் அஞ்சல், தெற்குகுருவிகுளம் கிராம மஜரா, கே.புதூர் கிராமம், கிழக்குத்தெருவில் இருக்கும் லேட்.சின்னமாரியப்பன் குமாரர், வயது 30 உள்ள அருண்

....பிரதிவாதிகள்

(**காலம்சென்ற 3ம் பிரதிவாதியின் வாரிசுகளை கட்சி சேர்க்க அனுமதிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.03/2019 13.12.2019 ல் அனுமதிக்கப்பட்டதன்பேரில், காலம்சென்ற 3ம் பிரதிவாதியின் வாரிசுகளான 10 முதல் 15 கூடுதல் பிரதிவாதிகள் அசல் வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டு, இ.ம.எண்.06/2023 நாள் 14.02.2024 உத்தரவின்படி வழக்குரை திருத்தம் செய்யப்பட்டுள்ளது).

(**இ.ம.எண்.09/2025 நாள் 13.08.2025 உத்தரவின்படி காலம்சென்ற 4ம் பிரதிவாதியின் வாரிசுகளான 16 முதல் 19 கூடுதல் பிரதிவாதிகள் அசல் வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டு வழக்குரை திருத்தம் செய்யப்பட்டுள்ளது).

வாதியால் இவ்வழக்கானது, பிராதின் 2வது தபசில் சொத்து வாதி மற்றும் 1, 2 மற்றும் 5 முதல் 15 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பொது நடைபாதையென தீர்மானித்து, அதற்கு அனுசரணையாக வாதி எப்போதும்போல் பிராதின் 2வது தபசில் சொத்தை பொதுநடைபாதையாக பயன்படுத்தி அனுபவம் செய்து

வருவதை 1ம் பிரதிவாதியோ, அவரின் வாரிசுகளோ, வகையாட்களோ, வேலையாட்களோ, ஏஜெண்ட்களோ அல்லது மற்றவர்களோ யாதொரு விதத்திலும் எவ்வித இடையூறும் செய்யாதிருக்கும் பொருட்டு 1ம் பிரதிவாதி வகையறாக்கள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பிக்கும்படிக்கும், பிராதின் 2வது தபசில் சொத்தின் ஒரு பகுதியில் 1ம் பிரதிவாதி நூதனமாக ஏற்படுத்தியுள்ள 3வது தபசில் அமைப்புகளை இந்நீதிமன்றம் நிர்ணயிக்கும் ஓர் தினத்திற்குள் அப்புறப்படுத்திப் போகும்படிக்கும், தவறும் பட்சத்தில் வாதியே இந்நீதிமன்றம் மூலமாக 1ம் பிரதிவாதியின் செலவில் அப்புறப்படுத்திப் போகும் வகையில் வலியுறுத்துக் கட்டளை உத்தரவு பிறப்பிக்கும்படிக்கும் மற்றும் வழக்கின் செலவுத் தொகை கோரியும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 14.12.2015 |
| வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்ட நாள் | : | 14.12.2015 |
| வழக்கு மூலம் | : | 17.12.1991, 1993, 1991, 03.12.2015, 2015 டிசம்பர் சங்கரன்கோவில் வட்டம், தெற்கு குருவிகுளம் பஞ்சாயத்து எல்கைக்குட்பட்ட கே.புதூர் கிராமத்தில் வைத்து உண்டாகிற்று. |
| வழக்கு மதிப்பு | : | ரூ.3,000/– அதில் பாதி ரூ.1500/– + ரூ.1,000/– மொத்தம் ரூ.4,000/– |
| நீதிமன்ற முத்திரை கட்டணம் | : | தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக் கட்டண சட்டம் பிரிவு 25(b)–ன் படி 'அ' பரிகாரத்திற்கு ரூ.113.00/–ம், பிரிவு 27(c)–ன் படி 'ஆ' பரிகாரத்திற்கு ரூ.75.50/–ம், கூடுதலாக ரூ.0.50/–ம் சேர்த்து ஆக மொத்தம் ரூ.189.00/– நீதிமன்ற முத்திரை கட்டணம் வாதியால் செலுத்தப்பட்டுள்ளது. |

நீதிமன்ற அதிகார வரம்பிற்காகவும், நீதிமன்ற முத்திரை கட்டணத்திற்காகவும், வாதி தனது தாவாவை 'அ' பரிகாரத்திற்கு பிராதின் 2 வது தபசில் சொத்தை ரூ.3000/- என மதித்து அதில் பாதி தொகையான ரூ.1,500/-க்கு தமிழ்நாடு நீதிமன்ற முத்திரை கட்டணம் சட்டப்பிரிவு 25(b)-ன் படி ரூ.113.00/-ம், வாதி கோரும் 'ஆ' பரிகாரத்தை ரூ.1000/- என மதித்து அதற்கு தமிழ்நாடு நீதிமன்ற முத்திரை கட்டணம் சட்டப்பிரிவு 27(c)-ன் படி ரூ.75.50/-ம், கூடுதலாக ரூ.0.50/-ம் சேர்த்து ஆக மொத்தம் ரூ.189.00/- நீதிமன்ற முத்திரை கட்டணம் வாதியால் செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கானது 07.04.2026 அன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.S.S.பிரதாப்ராஜ் அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.புஷ்பராஜ் அவர்கள் ஆஜராகியும், 3 ம் பிரதிவாதி காலம்சென்றுவிட்ட நிலையிலும், 4 முதல் 9 பிரதிவாதிகளுக்கு இந்நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை சார்பு செய்யப்பட்டும் இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் 4 முதல் 9 பிரதிவாதிகள் 19.01.2026 ம் தேதி இந்நீதிமன்றத்தால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், காலம்சென்ற 3 ம் பிரதிவாதியின் வாரிசுகளான 10 முதல் 15 பிரதிவாதிகளுக்கு இந்நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை சார்பு செய்யப்பட்டும் இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் 10 முதல் 15 பிரதிவாதிகள் 29.08.2024 ம் தேதி இந்நீதிமன்றத்தால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், காலம்சென்ற 4 ம் பிரதிவாதியின் வாரிசுகளான 16 முதல் 19 பிரதிவாதிகளுக்கு இந்நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை சார்பு செய்யப்பட்டும் இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் 16 முதல் 19 பிரதிவாதிகள் 17.10.2025 ம் தேதி இந்நீதிமன்றத்தால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சீர்திருத்த வழக்குரை, 1 மற்றும் 2 பிரதிவாதிகள்

தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரை, வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மற்றும் இருதரப்பு வாத உரைகள் ஆகியவைகளை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்பாணை**

| | |
|---|---|
| 1. | வாதியால் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டு ஆணையிடப்படுகிறது. |
| 2. | தரப்பினர்கள் தங்களது செலவுத் தொகையை தாங்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஆணையிடப்படுகிறது. |

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ம் நாளாகிய இன்று என் கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இதனடியில் வைக்கப்பட்டது.

(Sd/-M. Alima)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**செலவுதொகை விபரம்**

| வாதி தரப்பு | | பிரதிவாதிகள் தரப்பு |
|---|---|---|
| நீதிமன்ற முத்திரைக் கட்டணம் | ரூ. 189.00/– | (தாக்கல் செய்யப்படவில்லை) |
| வக்காலத்து ஸ்டாம்பு | ரூ. 10.00/– | |
| முதுநிலை வழக்கறிஞர் பீஸ் | ரூ.750.00/– | |
| இளநிலை வழக்கறிஞர் பீஸ் | ரூ.250.00/– | |
| ஆக மொத்தம் | ரூ.1,199.00/– | |

**தபசில்**

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை ரி.டி., கழுகுமலை சப்டி., தெற்கு குருவிகுளம் பஞ்சாயத்து எல்கைக்குட்பட்ட தெற்கு குருவிகுளம் கிராமத்தில் அயன் புஞ்சை சர்வே எண்.273/1 லட்டர் 0.26.5 ஏர்ஸில், கீழ்புறம் செண்ட் 33ல் வடகடைசியில் செண்ட் 3க்கு மால்

பொதுநடைபாதைக்கும் கிழக்கு

கருப்பன் புஞ்சைக்கும் தெற்கு

நல்லம்மாள் புஞ்சைக்கும் மேற்கு

1ம் பிரதிவாதி இடமாக இருந்து தற்சமயம் 2ம் பிரதிவாதி இடத்திற்கும் வடக்கு

உள்ளதும் அதில் உள்ள கதவு எண்.1/178 உள்ள வீடு மற்றும் அதன் மேற்கோப்பு வகையறாவும் தபசில் சரி.

**2 வது தபசில்**

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை ரி.டி., கழுகுமலை சப்டி., தெற்கு குருவிகுளம் பஞ்சாயத்து எல்கைக்குட்பட்ட தெற்கு குருவிகுளம் கிராமத்தில் அயன் புஞ்சை சர்வே எண்.273/1ல் உள்ள தென்வடல் பொதுபாதைக்கு மால்

குருவிகுளம் – செவல்குளம் செல்லும் சாலைக்கும் வடக்கு

கருப்பன் புஞ்சைக்கும் தெற்கு

3 முதல் 9 பிரதிவாதிகள் இடங்களுக்கும் கிழக்கு

வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் இடங்களுக்கும் மேற்கு

இதற்குள் கிழமேல் 6 அடி, தென்வடல் 202 அடி உள்ளதும் தபசில் சரி.

**3 வது தபசில்**

பிராதின் 2வது தபசில் சொத்தின் ஒரு பகுதி. இது பிராது பிளானில் E F புள்ளிகளுக்கு இடையே நூதனமாக நட்டப்பட்டுள்ள 20 கல்தூண்கள் மற்றும் அதில் தென்வடல் 180 அடி நீளத்தில் அமைக்கப்பட்டுள்ள கம்பிவேலி.

(Sd/-M. Alima)

S.T. H.C PDM, Sankarankovil

**<u>தீர்ப்பாணை</u>**

அசல் வழக்கு எண்.406/2015
நாள் : 24.04.2026
மு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்.